# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,413 — 1924 ம் ஹூ புரட்டாதிமீ 5 ந் திகதி வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலககச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அறுக்கொடையிலுள்ள பிரசித்த இடுகாட்டுக்கு ஓர் ரோட்டுக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 18,485. குறிச்சி—மகா அறுக்கொடை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். வ. று. ப. |
|---|---|---|---|---|
| 2 | அலுபோககவத்தை .. | ஒரு தென்னமரங்கொண்ட தோட்டம் | தடுவாகே சுவானிஸ் பெரேராவும் மறுபேரும் | 0 0 5·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஹூ ஒக்டோபர்மாசம் 20 ந் தேதியிலன்று காலை 10 மணிக்குக் களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1924 ம் ஹூ ஒகஸ்ட்மீ 29 ந உ.

எச். ஏ. பேர்டன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தங்காலை உதவிப் பொலீஸ் சுப்பிறின் தெண்டன்ற் உத்தியோகஸ்தரின் வாசஸ்தானம் கட்டுவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

B. S. பிரதமபடத்து இலக்கம் 314. குறிச்சி—தங்காலை சௌக்கியாதாரசங்க எல்லைக்குட்பட்ட பகுதி.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | தாப்பைவத்த .. | 63 தென்னமரங்களும், ஓட்டினால் வேய்ந்த கல்வீடு ஒன்றும், குதிரை லாயமும், கக்கூசும், சுவரும் கம்பிவேலியும் ஆகிய இவைகள் உள்ள தோட்டம் | காலியைச்சேர்ந்த டீ. டபிள்யு. சுபசிங்க என்பவர் | 1 3 2 55 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஸ்ரீ செப்றெம்பர் (புரட்டாசி) மாசம் 29 ந் தேதியிலன்று 10 மணிக்கு தங்காலை றஸ்ட்கவுசில் (வாடிவீட்டில்) என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின்தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்மாந்தொட்ட கச்சேரி,
1924 ம் ஸ்ரீ செப்றெம்பர் (புரட்டாசி) மீ 1 ந் உ.

ஆர். எம். எம். வேர்ஸ்லி,
அரசாட்சி உதவி ஏஜன்றர்.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிவுல்பனை பெண்பாடசாலை என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 3,395. குறிச்சி—கிவுல்பனை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கலத்கேவத்தை அல்லது பெலனேவத்தை | தோட்டம் .. | முடி .. .. .. | 0 0 23·4 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷி. டிங்கிரிமெனிக்காவும் மறுபேரும் .. | 0 1 32·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஸ்ரீ ஐப்பசி மாதம் 4 ந் தேதியிலன்று 10 மணிக்கு கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1924 ம் ஸ்ரீ புரட்டாதிமீ 2 ந் திகதி.

ஜே. ஆர். உவால்ற்றேர்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

"உப்பு விலைக்கு வாங்குபவர்களுக்கு நிறுத்து ஏற்றுமதிபண்ணிக்கொடுக்க" வென்று மேலஉறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றுத்துரை யவர்களால் 1924 ம் ஆண்டு புரட்டாதி மாசம் 17 ந் திகதி பிற்பகல் 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதாவது :—

புத்தளம் கீழ்கரை உப்பளத்திலிருக்கும் உப்புமேடையிலுள்ள உப்பை 1924 ம் ஆண்டு ஐப்பசிமீ 1 ம் திகதி தொடக்கம் 1925 ம் ஆண்டு புரட்டாதிமீ 30 ம் திகதி வரைக்கும் புத்தளம் கீழ்கரை உப்புமேடையில் காத்தைக்காரருக்கும் புத்தளம் ரேகில் பாதைககாரருககும் நிறுத்து ஏறறுமதிபண்ணி ஒப்புக்கொடுக்கும் பணிவிடை.

கேள்விக்காரர் இதன்பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும்

1. பின்வரும் காணும் பிரகாரம் 1,000 அந்தர் உப்புக்கு என்னவீதம் என்று கேள்விக்காரர் வெவ்வேறாய் விரித்துக் காட்டவேண்டியது.

முதலாவது.—உப்புமேடையிலிருக்கும் உப்பை உப்புமேடையில் காத்தைக்காரருக்கு நிறுத்து ஏற்றுமதிபண்ணி ஒப்புக்கொடுக்க ஆயிரம் அந்தருக்கு என்னவீதமென்றும்.

இரண்டாவது.—உப்புமேடையிலிருக்கும் உப்பை உப்புமேடையி லிருந்து புத்தள ரேகுக்கு நிறுத்து ஏற்றுமதிபண்ணி பாதைக்காரருக்கு ஒப்புக்கொடுக்க ஆயிரம் அந்தருக்கு என்னவீதமென்றும்.

மூன்றாவது.—உப்புமேடையிலிருககும் உப்பை உப்புமேடையில் காத்தைக்காரருக்கு நிறுவைக்கூலி தவிர்த்து ஏற்றுமதிபண்ணி ஒப்புக்கொடுக்க ஆயிரம் அந்தருககு என்னவீதமென்றும்.

நாலாவது.—உப்புமேடையிலிருக்கும் உப்பை உப்புமேடையிலிருந்து புத்தளம் ரேகுக்கு நிறுவைககூலி தவிர்த்து ஏற்றுமதிபண்ணி பாதைக்காரருககு ஒப்புக்கொடுக்க ஆயிரம் அந்தருக்கு என்னவீதமென்றும்.

2. போதிய கூலிஆட்களையும் காத்தைகளையும் கூலிக்குப்பிடித்து நாள்ஒன்றுககு 1,500 அந்தர் உப்பு நிறுத்து ஏற்றுமதிபண்ணிக் கொடுககக் கேள்விக்காரர் ஆயித்தமா யிருக்க வேணடும்.

3 ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்விகேட்கமுதல் எந்தக் கச்சேரியிலாவது ரூபாய் 50 ஒடுக்கவேண்டும்; அவ்விதமே காசுகட்டாத ஒருகேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது; கொந்திறாத்தைச் சரியாக நடப்பிக்கிறதறகு 1,000 ரூபாய்கொண்ட சம்திப்புப்பெற்ற பிணைக்கொடுக்க அல்லது பொருத்த உடன்படிக்கை பண்ணிக்கொளளத் தவறினால் இந்தக் கட்டினபணம் கவர்ணமேந்துககாகப் பறிமுதலாககப்படும். பறிமுதலாகப்படாத கட்டின பணம் கேள்விக்காரருக்குத திரும்பக் கொடுக்கப்படும்.

4. கொந்தீஸ் அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு கேள்விக்காரன் தனக்குப் பதிலாய்ப் புத்தளத்தில் ஒரு பெயர்வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

5. இந்தக் கொந்திருத்து சரியாக நடைபெறுகிறதற்காகப் பிணைக்கு ஏற்படுகிறதாகிய இரண்டு போதிய ஆட்களால் கையொப்பமிடப்பட்டு அவர்களின் மேல்விலாசமும் எழுதப்பட்டகடிதம் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் அணைத்திருக்க வேண்டியது.

6. கேள்வியின் வீதங்களையிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள் பண்ணிஞல் அந்த இடத்தில் கேள்விக்காரரின் கையொப்ப அடையாள மிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி ஒன்று கொழும்பிலிருக்கும் சுங்கைபோர்ந்த அரசிறை வருமான காரியத் தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏஜன்றுத்துரை அவர்களுக்கும் கேள்விக்காரன் தவால்வழியாக அனுப்பவேண்டும்.

8. கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் அன்று ஏதும் தேள்வையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்வதற்காகக் கேள்விக்கார்ரர் கச்சேரியில் சமுகமா யிருக்கவேண்டும்.

9. எல்லாக் கேள்விப் பத்திரங்களையும் அல்லது எதையும் யாதாமொரு கேள்வியில்லாமல் தள்ளிப்போடுகிறதற்கு அரசாட்சியாருக்குத் தத்துவமுண்டு.

10. கவுண்மேந்தார் வைத்திருக்கும் தவறுபோன கொந்திருத்துக்காரருடைய டாப்பிலே கேள்விக்காரர் ஆருடைய பெயரென்ருலும் வேறை யாருடனும் ஒருமித்தாவது அல்லது தனியேயாவது இருந்தால் அவையுடைய கேள்வி ஏற்கப்பட மாட்டா. அப்படியிருக்கும் ஆட்கள் யாருக்கென்ருலும் கேள்விக்காரர் தத்துவம் கொடுக்கப்படாது அல்லது அவையை தங்களுக்குக்கீழ் வேலைசெய்கிறதற்கு ஏற்கப்படாது: புத்தளம் உதவி ஏசன்றுத்துரை அவர்கள் தனக்கு நியாயமாகத் தெரிந்து எழுத்தில் அறிவித்தால் அப்படி அறிவிக்கப்படும் பெயர்வழியுள்ள ஆட்களையும் ஏற்கப்படாது.

11. புத்தளம் உதவி ஏசன்றுத்துரை அவர்களின் உத்தரவின்றி உடன்படிக்கையை இன்னெருவருக்குக் கொடுக்கவாவது அல்லது சாட்டுதல்பண்ணவாவது கூடாது.

12. மேலே சொல்லப்பட்ட விதிகளைச் சரியாக அனுசரிக்காத எந்தக் கேள்விப்பத்திரமாவது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

13. இன்னும் ஏதேன் இவைகளைப்பற்றிய விபரங்கள் புத்தளம் உப்பு சுப்பிறீந்தண்டனிடம் அறிந்துகொள்ளலாம்.

ஈ. ஆர். ஸட்பெரி,
உதவி ஏசன்றுக்காக.

புத்தளம் கச்சேரி,
1924 ம் ஸ்ரீ ஆவணிமீ 28 ங் திகதி.

---

## அரசாட்சி உத்தி யாகமில்லாத அங்கத்தவரைத் தெரிவுசெய்தல்.

திரிகோணமலை சுகாதாரசங்கத்துக்கு உத்தியோகமில்லாத அங்கத்தவரை 1925 ம் 1926 ம் ஆண்டுகளுக்காகத் தெரிவுசெய்வதற்கு நடத்தப்படும் கூட்டத்தில் தெரிந்துகொள்ளப்படுவதற்கு தகுதியுள்ளவர்களின் பெயர்வளிடாப்பும், தெரிவதற்குத் தகுதியுள்ளவர்களின் பெயர்டாப்பும் திரிகோணமலை சுகாதாரசங்க கந்தோரில் பரிசோதனைக்காக கந்தோர் நேரத்தில் வெளியரங்கப்படுத்தப்படு மென்றும், சொல்லப்பட்ட டாப்புகளில் சேர்க்கவேண்டிய பெயர்வளிகளைப்பற்றிய உருத்துகளையும் அவைகளில் பதிக்கப்பட்டிருக்கும் பெயர்வளிகளுக்கு விரோதமாக செய்யப்படும் ஆட்சேபனைகளையும் விசாரிப்பதற்காக 1924 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 4 ங் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சொல்லப்பட்ட கந்தோரில் நான் வந்திருப்பேன் என்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மட்டகளப்புக் கச்சேரி,
1924 ம் ஆண்டு ஆவணிமீ 29 ங் திகதி.

சீ. வீ. பிறேயின்.
கீழ்மாகாண அரசாட்சி ஏசன்று.

---

## வண்டாரவளைப்பட்டணத்தில் சுகாதார சீர்திருத்தச் சங்கத்தவர்களை நியமித்தற்பத்திரம்

சுதேச சவுக்கிய தேர்ச்சிச் சங்கத்தைப்பற்றிப் 1898 ம் ஆண்டு 3 ம் கட்டளைச்சட்டத்தின் 11 ம், 12 ம் பிரிவின் வரைவுப்பாட்டின் பிரகாரம் வண்டாரவளைப் பட்டணத்தில் சவுக்கிய தேர்ச்சிச் சங்கத்திற்கு அரசாட்சியாரின் பணிவிடையி வில்லாத அங்கத்தவர்கள் மூன்று பெயர்களைத் தெரிந்து அவர்கள் 1925 ம் ஆண்டு தை மாதம் 1 ங் திகதி துவக்கம் 1926 ம் ஆண்டு மார்கழி மாதம் 3 ங் திகதி வரைக்கும் இரண்டு வருடக் காலத்துக்கு உத்தியோகம் செய்யும்படி நியமிக்கும் பொருட்டு வண்டாரவளைக் கோட்டில் 1924 ம் ஆண்டு மார்கழி மாதம் 15 ங் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஓர் சபை கூடப்படும் என்று இத்தால் அறிவிக்கிறேன். சங்கத்தலைவர்களைத் தெரிதல் செய்தற்குச் சம்மதம் கொடுப்பவர்கள் தாங்களே கூட்டத்திற்கு வரவேண்டும். பிரதி யாட்களை அனுப்புதல் ஏர்க்கப்படமாட்டாது. அங்கத்தவர்களாய் நியமிக்கப்பட விரும்புவோர் எழுத்து மூலமாகத் தங்கள் பெயர்களைக் கொடுத்தலுமன்றிச் சம்மதமளிக்கத் தக்கவர்களாயிருக்கிற இரண்டு ஆட்களால் அவ்வெழுத்துப்பத்திரம் கையொப்பமிடப்பட்டு வதுளை லோக்கல்போட் ஆபீசில் 1924 ம் ஆண்டு மார்கழி மாதம் 1 ங் திகதி பகல் 2 மணிக்கு முன்னே கொடுக்கப் படவேண்டும்.

வதுளை கச்சேரி
1924ம் ஆண்டு ஆவணிமீ 23 ங் திகதி.

ஆர். ஏ. ஜீ. பெஸ்ட்டிங்,
பெரிய ஏஜன்ட்டு துரை அவர்கள்

1922 ம் ஆண்டு பிரட்டாசி மீ 8 ந் திகதியின் 7,281 ம் இலங்கை அரசாட்சி "கசெற்" பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.

### வதுளை பட்டணத்தில் சுகாதார சீர்திருத்த சங்கத்தவர்களை நியமித்தற் பத்திரம்.

சுதேச சவுக்கிய தேர்ச்சிச் சங்கத்தைப்பற்றிய 1898 ம் (வரைவுபாட்டின்) ஆண்டு 13 ம் கட்டளைச்சட்டத்தில் 11 ம் 12 ம் பிரிவின் வரைவுபாட்டின் பிரகாரம் வதுளை பட்டணத்தில் சவுக்கிய தேர்ச்சிச் சங்கத்திற்கு அரசாட்சியாரின் பணிவிடையில்லாத அங்கத்தவர்கள் மூன்று பெயர்களை தெரிந்து அவர்கள் 1925 ம் ஆண்டு தைமீ 1 ந் திகதி துவங்கி 1926 ம் ஆண்டு மார்களிமீ 31 ந் திகதி வரைக்கும் இரண்டு வருட காலத்துக்கு உத்தியோகம் செய்யும்படி நியமிக்கும்பொருட்டு வதுளை கச்சேரியில் 1924 ம் ஆண்டு மார்களிமீ 18 ந் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஊர்சபை கூட்டப்படும் என்று இத்தால் அறிவிக்கிறேன் சங்கத்தவர்களை தெரிதல் செய்தற்கு சம்மதம் கொடுக்கப்படுபவர்கள் தாங்களே கூட்டத்துக்கு வரவேண்டியது பிரதியாட்டளை அனுப்புதல் ஏற்குதல்படமாட்டாது அங்கத்தவர்களாய் நியமிக்கப்பட விரும்புவோர் எழுத்து மூலமாகத் தங்கள் பெயர்களை கொடுத்தலும் அன்றி சம்மதம் அளிக்கத்தக்கவர்களாய் இருக்கிற இரண்டு ஆட்டளால் அவ்வெழுத்து பத்திரம் கையொப்பமிடப்பட்டு வதுளை லோக்கல் போட் ஆபீசில் 1924 ம் ஆண்டு மார்களிமீ 5 ந் திகதி பகல் 2 மணிக்குமுன்னே கொடுக்கப்பட வேண்டியது.

வதுளை கச்சேரி,
1924 ம் ஆண்டு ஆவணிமீ 23 ந் திகதி.

ஆர். ஏ. ஜி. பெஸ்டிங்,
பெரிய ஏஜண்டுத் துரை அவர்கள்.

---

### வழக்குப்புத்தகங்களை அழித்தலைப்பற்றிய அறிவித்தல்.

1883 ம் ஆண்டு தொடங்கி 1888 ம் ஆண்டு வரையிலும் கொழும்பு டிஸ்திரிக்கோட்டிலுள்ள தேவையில்லாதவும் பெறுத வழக்குகள் நம்பர்கள் 90,381 ல் இருந்து 92,699 வரைக்கும், 94,501 ல் இருந்து 96,075 வரைக்கும், 98,640 ல் இருந்து 99,999 வரைக்கும், ஐப்பசி மாதம் முதலாந் தேதி முதல் மூன்று மாதங்கள் கழிந்தவுடனே 1894 ம் ஆண்டின் 12 ம் இலக்க கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் அழித்துப்போடப்படும் என்று இத்தால் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

எந்த வழக்கிலாவது உடந்தைப்பட்டவர்கள் ஏவுதல் அல்லது பெட்டிச மூலமாகுதல் போதிய காரணங்காட்டி அவ்விதமான வழக்கு புஸ்தகங்களை அழிக்கப்படாது என்று உரிதுப்பேசலாம்.

டிஸ்திரிக் கோடு,
1924 ம் ஆண்டு புரட்டாதிமீ 1 ந் தேதி.

டபிள்யு. எஸ். டி சேரம்,
டிஸ்திரிக் நீதிபதி.

---

A. C. RICHARDS, ACTING GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.